# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 115 இதழ் : 39 20-10-1989 (ஒக். 20 — ஒக். 27) ரூபா 1-50 — இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


| | |
|---|---|
| யாழ். சென் யேம்ஸ் | 500 |
| கரம்பொன் பங்கு | 336 |
| யாழ். பேராலயம் | 325 |
| அச்சுவேலி பங்கு | 300 |
| இளவாலைப் பங்கு | 264 |
| சில்லாலை | 225 |
| மாதகல் | 202 |
| மானிப்பாய் | 200 |
| பருத்தித்துறை | 196 |
| மன்னார் பேராலயம் | 192 |
| வங்காலை | 190 |
| மண்டைதீவுப் பங்கு | 175 |
| பண்டியன்தாழ்வு | 175 |
| நெடுந்தீவுப் பங்கு | 161 |
| சுன்னாகப் பங்கு | 153 |


University of Jaffna ... RECEIVED ... Periodicals Division Library


மாற்றமே முன்னேற்றம் என எண்ணமல், முன்னேற்றத்திற்காக என்னென்ன மாற்றங்களை செய்யமுடியுமோ அவற்றை துணிவுடன் பொதுநிலையினர் செயற்படுத்துதல் வேண்டும்

# கருவிகளாக அல்லாது அவற்றை இயக்குபவர்களாக மாறவேண்டும்

**சில சில அமைப்புக்கள் அதன் செய்கைகளிலே மாத்திரம் நின்று விடாது அந்த அமைப்புக்கள் வழியாக முழுத்திருச்சபையில் உள்ள சகலரையும் ஊக்குவிக்கும் ஒரு இயக்கமாக மாறவேண்டும். ஆவியினால் ஏவப்பட்ட ஆசிரியத்துவத்தினால் ஊக்குவிக்கப்பட்ட மாற்றங்களை துணிவுடன் செயற்படுத்த வேண்டும். இவை மேல் இருந்து திணிக்கப்பட்ட மாற்றங்களாக இல்லாமல் வருங்காலத்திலே பொருத்தமுள்ள கிறிஸ்தவராகவும், திருச்சபையாகவும் செயற்பட இன்றியமையாத மாற்றங்களை செயற்படுத்த வேண்டும்.**

**பொது நிலையினர் மாத்திரமல்ல திருச்சபையின் சகலரும் தமது தன்மையையும், பணியையும் புதிய வழியிலே கண்டுபிடிக்க வேண்டும். யாழ். மறைவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுக் கூட்டத்தில் அருட்திரு S. J. இம்மனுவல் அடிகள் உரை.**

ஆணைக்குழுக்கூட்டம் இம்மாதம் 7 ஆந் திகதி யாழ். ஆசனக்கோவில் புனித ஞானப்பிரகாசியார் மன்றத்தில் நடைபெற்றது. இதன் புதிய தலைவராக அருள்திரு. S. இல்லறி ஜெபநேசன் அவர்கள் ஏற்கனவே ஆயரவர்களால் மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். கலா. J. C பிலிப்ஸ் அவர்கள் துணைத்தலைவராகவும், செல்வி நீற்று குணநாயகம் அவர்கள் செயலாளராகவும், திரு. H. மரியநாயகம் அவர்கள் பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனை அடுத்து செயற்குழு உறுப்பினர்களாக திரு. N. இராயப்பு, திரு. J. ராஜேந்திரம், திருமதி அருள் சோதி செல்வநாயகம் என்பவர்களும். தேசிய ஆணைக்குழுவின் யாழ் மறைவட்டப் பிரதிநிதிகளாக திரு. A. சந்தியாப்பிள்ளை, திருமதி அருள் சோதி செல்வநாயகம், திரு. J. ராஜேந்திரம் என்பவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, யாழ் மறைவட்டத்தின் ஆணைக்குழுக்களுக்குப் பொதுநிலையினரின் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ் மறைவட்ட கல்வி, மறைக்கல்வி, மேய்ப்புப்பணி ஆணைக்குழு அருட், சகோதரி லில்லி ஒசா.

யாழ் மறைவட்ட திருவழிபாட்டு, பண்பாட்டு ஆணைக்குழு திரு. பங்கிராஸ்.

யாழ் மறைவட்ட துறவியர், திருமடசார்பற்ற சபைகளுக்கான ஆணைக்குழு செல்வி நீற்று குணநாயகம்.

யாழ் மறைவட்ட நீதி, சமாதான முன்னேற்ற ஆணைக்குழு திரு. J. ராஜேந்திரம்.

யாழ் மறைவட்ட மறைபோதகப்பணி ஆணைக்குழு சகோ. யூடித்.

யாழ் மறைவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழு திரு. A. W. அரியநாயகம்.

யாழ் மறைவட்ட சமூகத் தொடர்பு சாதன ஆணைக்குழு திரு. யோசவ் பாலா.

சென்றவருடம் நடைபெற்றதுபோல் இவ்வருடமும் ஒளிவிழாவை முன்னிட்டு, பொதுநிலையினர் பற்றிய சில கருத்துக்களை மையப் பொருளாக வைத்து நாடகம், கவிதைப் போட்டிகள் நடாத்தலாம் என்றும், இம்மாதம் 13, 14, 15, ந் திகதிகளில் பொதுநிலையினருக்கான கருத்தரங்கு யாழ். அடைக்கலநாயகி ஆலயத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## பொதுநிலையினருக்கு நிர்வாகப் பொறுப்புகள்

ஜபல்பூர் மறைமாவட்ட ஆயர் தியோபேன் தண்ணிக்குன்னல் தமது மறைமாவட்டத்தில் பொதுநிலையினருக்கு பங்கு வேலைகளில் கூடிய பொறுப்புக்களை அளிக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

சகல பங்குகளிலும் நிதிக் குழுக்கள் அமைப்பது பற்றி ஆலோசனை கூறிய அவர் மறைமாவட்ட நிதி நிருவாகத்தையும், பொதுநிலையினர் குழுவிடம் ஒப்படைக்க தாம் ஆயத்தமாயிருப்பதாகக் கூறியுள்ளார்.

பொதுநிலைத் தலைவரான லெப்டினன்ட் கேர்ணல் வால்டர் டி சூசா பொதுநிலையினருக்கு தக்க செயல் நோக்கம் அளிக்கப்பட்டால் பொறுப்புக்களை வகிக்கும் திறமை அவர்களுக்குண்டு எனவும், பேராலயப்பங்கு நிதி நிருவாகத்தை பொதுநிலையினர் குழுவொன்று திறமையாக ஆற்றி வருகிறதெனவும் கூறினார்.

பொதுநிலையினர் ஆணைக் குழுவின் தலைவர் எவ். டப்ளியூ கொரேயா ஏழை எளியவர்களுக்கு உதவிபுரிதல், குடும்பங்கள், இளைஞர், பெண்கள் தொடர்பான பணிகள், நிதி நிருவாகம், நற்செய்திப்பணி, சமூக அரசியல் துறைகள் ஆகியவற்றில் பொதுநிலையினர் சிறப்பாகப் பணியாற்றலாம் என கருத்துத் தெரிவித்தார்.

## கிறீஸ்தவத்தில் M. A. பட்டம் பயில யாழ். பல்கலைக்கழகத்தில் வாய்ப்பு!

கலைமாணி பட்டத்திற்காக (B. A.) கடந்த 10 ஆண்டுகளாக கிறீஸ்தவ நாகரீகத்துறை கற்பிக்கப்பட்டு வந்த யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திலே இவ்வாண்டில் இருந்து கிறீஸ்தவத்தில் கலை முதுமாணி (M.A.) பட்டத்திற்காக பயிலுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து கலைமாணி (B. A) அல்லது இறையியல்மாணி (B. Th.) பட்டத்தைப் பெற்றவர்களும் இக்கல்வி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

கலைமாணி பட்டத்திற்கான கிறிஸ்தவ நாகரீக துறையின் பாடத்திட்டம் இவ்வாண்டு மறு சீரமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவத்தின் வரலாறு, வேதாகம ஆய்வு, மெய்யியல், இறையியல் சிந்தனை வளர்ச்சி, கிறிஸ்தவ கலை இலக்கியம் என்ற ஆகிய நான்கு பெரும் பிரிவுகளை புதிய பாடத்திட்டம் உள்ளடக்குகிறது.

இந்த கிறிஸ்தவ இயல் துறைக்கு பொறுப்பாயிருக்கிற அருட் கலாநிதி A. J. V. சந்திரகாந்தன் அவர்கள், கலாநிதிகள் கென்றிவிக்டர், S.J. இம்மானுவேல், யஸ்ரின் ஞானப்பிரகாசம், S. ஜெபநேசன் ஆகியோரின் உதவியுடன் பாடத்திட்டத்தைப் புனரமைத்திருக்கிறார்.

## மறைபோதகரின் கல்லறை பேணப்படுகிறது

1901ம் ஆண்டில் சீனவுக்கு வந்து அங்கு 40 ஆண்டுகள் பணிபுரிந்த பெல்ஜிய நாட்டுக் குருவான பிதா வின்சென்ற் லெபேயின் கல்லறை இன்றும் நன்கு பேணப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

ஜப்பானிய படையெடுப்பின்போது சீன வீரர்களுக்கு அவர் ஆற்றிய பணிக்காக அவரைப் பாராட்டிய தேசிய சீன அரசு அவரது கல்லறைக்காக இந்த நிலத்தை வழங்கியது. கம்யூனிஸ்ட் ஆட்சியின்போதோ கலாசாரப் புரட்சியின்போதோ இக்கல்லறை அழிக்கப்படாமலிருப்பதற்கு அது ஒரு குன்றின்மீது அமைக்கப்பட்டுள்ளதே காரணமாயிருக்கலாம். சியாங் லூட் என்பவராலும் இக்கல்லறை நீண்டகாலமாகப் பேணப்பட்டுவந்தது.

பிதா லெபே சீனக் குருக்களுக்காக ஸ்தாபக அருளப்பர் சபையையும் கன்னியர்களுக்காக திரேசம்மாள் சபையையும் நிறுவி சுதேச அழைத்தல்களை ஊக்குவித்தவர்.

1949இல் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டபோது இவ்விரு சபைகளும் தாய்வானுக்கு மாற்றப்பட்டுவிட்டன.

பிதா லெபேபின் கல்லறை தவிர 400 ஆண்டுகளுக்குமுன் மரித்த வேறு நான்கு மறைபோதகரின் கல்லறைகளும் சீனவில் காணப்படுகின்றன.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

### பாடசாலைகளும்-சமயக்கல்வியும்

ஐ. தே. கட்சி எம். பி. கள் ''நற்பிரசைகளை உருவாக்கும் வகையில் சமயக்கல்வி மீண்டும் மறுசீரமைக்கப்பட வேண்டும்'' என்பதை பாராளுமன்றத்தில் வலியுறுத்தி ஏகமனதான பிரேரணையையும் நிறைவேற்றி உள்ளனர்.

பாடசாலைகள் பறிக்கப்பட்டபின் சமயக்கல்வி மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. கட்டாய பாடமான சமய பாடம் கைவிடப்பட்டது ஒவ்வொரு நாளும் இருந்த பாடம் குறைக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் முதற் பாடமான சமயம் வேறுநேரத்திற்கு மாற்றப்பட்டது. சமய ஆசிரியர்கள் இருக்கிறார்களா என்ற கவனம் எடுக்கப்படவில்லை. சமயத்தை படித்த எவரும் சமயம் படிப்பிக்கலாம் என்றநிலை வந்துள்ளது.

புள்ளிகள் அதிகம் எடுத்தால் பல்கலைக்கழக அனுமதி பெறலாம் என்பதற்காகவும், மேற் படிப்பிற்கு வேறுபாடங்களை தெரிவு செய்ய முடியாது என்ற நிலைவரும் போதும் தான் சமய பாடத்தை தெரிவு செய்கின்றனர். கத்தோலிக்க பாடசாலையில் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற நிலைமாறி, கத்தோலிக்க பாடசாலைகளைத் தேடி ஓடிய காலம் மாறி, கத்தோலிக்க பாடசாலைகளில் இருந்து வேறு பாடசாலைகளைத் தேடி ஓடும் காலம் வந்து விட்டது. கத்தோலிக்க பாடசாலைகளில் முழுக்க முழுக்க கத்தோலிக்க பிள்ளைகள் படித்த காலம் போய் இன்று கத்தோலிக்க சூழலிலும் கட்டுப்பாட்டிலும் இருக்கும் பாடசாலைகளில் பாதிக்கு மேல் வேறுமாணவர் படிக்கும் நிலை வந்து விட்டது. கத்தோலிக்க பாடசாலைகளுக்கு கத்தோலிக்க அதிபர்கள் இல்லாமல் போவதும், கத்தோலிக்க வழிபாடுகள் மட்டுமே இருந்து வந்த பாடசாலைகளில் வேறுமத வழிபாடுகளைத் தொடக்குவதும் அதிகரித்துள்ளது.

பெற்றோர் தான் முதல் மறை ஆசிரியர்கள். ஆரம்ப முதல் செபங்களைச் சொல்லிக் கொடுப்பது, கத்தோலிக்க கோட்பாடுகள், நடை முறைகள் என்பவற்றை பயிற்றுவிப்பது, திரிகாலச்செபம், செபமாலை, சாப்பிட முன், பின் செபங்களைச் சொல்லுவிப்பது, கிறிஸ்தவ கதைகள், படிப்பினைகளைச் சொல்லிக் கொடுப்பது எல்லாம் பெற்றோரின் கடமையாகும். கத்தோலிக்க சஞ்சிகைகள், பாதுகாவலன், மறைக்கல்வி வகுப்பு, திருப்பலி, வழிபாடுகள் என்பவற்றை ஊக்குவிப்பதும் இவர்களின் கடமையாகும்.

பங்கு ரீதியாக நடைபெறும் மறைக்கல்வி வகுப்பை சம்பந்தப்பட்டவர்கள் உரிய முறையில் நடத்துவதும், ஊக்குவிப்பதும் கத்தோலிக்க அறிவை வளர்க்கும்.

வருடா வருடம் மறைஆசிரியர் பயிற்சி நடத்தப்படுகிறது. ஒவ்வொரு பங்கிலும், இருந்து படிக்கும் ஆர்வமும், உதவிசெய்யும் ஆர்வமும் உள்ளவர் வந்து பயிற்சி பெறவேண்டும். சில பங்குகளில் மறைஆசிரியர்கள் இல்லை. சில பங்குகளில் மறைக்கல்வி வகுப்புக்கள் இல்லை சில மறைஆசிரியர்கள் திருமணமான பின் படிப்பிக்க கூடாது என நினைக்கிறார்கள்.

மறைக்கல்வி வகுப்புக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் வகுப்புக்களை மேற்பார்வை இடவேண்டும். மாணவர்களை ஊக்குவிக்க பரிசில்கள், தராதரப்பத்திரங்கள், மறைக்கல்வி தினங்கள், படிப்பிப்பவருக்கு சிறிய சன்மானம், வேதாகம சுற்றுலா, கருத்தரங்கு, ஒன்று கூடல்கள் என்பன ஒழுங்கு செய்யப்படவேண்டும்.

இவற்றுடன் சமயக்கல்வி பற்றி மீள்பரிசீலனை செய்யக்கூடிய சாத்தியக்கூறு தெரியும்போது எல்லோரும் சேர்ந்து குரல்கொடுக்கவேண்டும். யாழ். பல்கலைக்கழகத்தில் இறையியல் பட்டதாரிகளும், கிறிஸ்தவ நாகரீகத்துறை பட்டதாரிகளும் முதுமாணி (M.A) செய்ய புதிய சந்தர்ப்பும் கிடைத்துள்ளபோது பயன் படுத்தவேண்டும். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சமயப் பாடத்தை விசேடமாகச் செய்ய பயிற்றப்படுவோர் முன்வரவேண்டும. மறைஆசிரியர் பயிற்சியைத் தரமுயர்த்துவதோடு அவர்களை சமயஆசிரியர்களாக அரச அங்கீகாரம் பெறவேண்டும்.

## தேனருவி

### ஆண்டின் 29-ம் ஞாயிறு—(22-10-89)

### அயர்வு அடையாதீர்!

உலகப் புகழ்பெற்ற நாடக எழுத்தாளர் பெர்னட் ஷாவின் வாழ்வு நல்லதொரு பாடம் புகட்டுகிறது. அவர் கொண்ட இலட்சியப் பயணம் இடையூறுகள் நிறைந்த ஒரு நீண்ட பயணமாகும். எழுத்துத் துறையில் ஈடுபட்டிருந்த அவரை ஏழ்மை வலுவாக வாட்டியது. கந்தலாடையும், தேய்ந்த காலணியும் அவரது உடலை பல ஆண்டுகள் ஒட்டிக் கொண்டன. ஆயினும் ஏழ்மையும், சமுதாய பழிப்பும் அவரது மனதைத் தளரவைக்க முடியவில்லை ஒரு நாளைக்கு ஐந்து பக்கங்கள் எழுதி, சுமார் ஒன்பது ஆண்டுகள் இடைவிடாது உழைத்த பின்பு தான் அவர் படைத்த நாடகங்களையும், நவீனங்களையும் சமுதாயம் இனம் கண்டு கொண்டது. எறும்பு ஊரக் கற்குழியும் என்பது ஒரு முதுமொழி. விடாமுயற்சியால் பலர் வாழ்வில் சொல்லற்கரிய வெற்றிகளை ஈட்டியிருக்கிறார்கள்.

''இறுதிவரை நிலைத்திருப்பதுதான் விசுவாசத்தின் வல்லமை'' என்கிறார் அந்தியோக்கு இன்ஞசியார், இஸ்ரவேல் மக்களின் இலட்சியப் பயணத்தில் தறுக்கிட்ட அந்நியர் பலரில் அமலேசித்தாரும் ஒருவர். யோசுவா அமலேசித்தாரோடு போர் புரியும் வேளை இடைவிடாமல் மோயீசன் செபிக்கிறார். தளராத உள்ளத்துடன், மோயீசன் ஜெபித்தார். அதனால் அவர் மக்கள் அந்நியரை வென்றனர். நற்செய்தியும் பொருள் புதைந்த உவமையொன்று இயேசு மொழிகிறார்.

நீதியற்ற நடுவன் ஒருவன்—தெய்வபயம் அற்றவன், பொதுசன அபிப்பிராயத்திற்கு அஞ்சாதவன். தன் மனச்சாட்சியை மங்க வைத்தவன். இப்படிப்பட்டவன் தன்னை அண்டி வந்த, பரிந்து பேசக்கூட யாரும் இல்லாத கைம்பெண் ஒருத்திக்கு நன்மை புரிகிறான் காரணம் என்னவென்றால் அக்கைம் பெண்ணின் ஓயாத வேண்டுகோளே, மனம் தளரா அவளது நடத்தை தகுந்த பலன் அளிக்கிறது.

குதூகலத்துடன் ஆரம்பமாகும் எம் முயற்சிகள் பல வெற்றியைச் சந்திப்பதில்லை. காரணம் என்னவென்றால் பாதி வழியில் அவை கைவிடப்படுகின்றன. பொதுநலப் பணி, பக்திச் சபைகள், ஒன்று கூடுதல்கள், ஒன்றியங்கள் எனப் பல திறப்பு விழாக்கள் ஒரு சில மாதங்களுடனும், இன்னும் சில வருடங்களோடும் சொல்லாமலே மூடப்படுகின்றன. இயங்கினாலும்நன்மை பயப்பதில்லை. காரணம் துன்பங்கள், தோல்விகள் கண்டு மனம் துவண்டு போகிறோமே.

எவ்வளவோ கோலகலாமாக நிறைவேற்றி வைக்கப்படும் திருமணங்கள் ஒரு சில வருடங்கள் சுமூகமாக நகர்ந்தன. ஆனால் வெள்ளி விழா, பொன் விழா என்ற வெற்றிகளைக் காணக்கொடுத்து வைப்பதில்லை காரணம் தொடர்ந்து செல்ல மனப்பக்குவம் இல்லாமையே.

ஆன்மீக நெறியில் கூட உணர்ச்சிகள் மேலெழ நாம் பல தீர்மானங்களை எடுக்கலாம். ஆனால் அவற்றைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதே நன்மை தரும். ஆண்டவரிடம் ஒரே விண்ணப்பத்தை மீண்டும், மீண்டும் கேட்பதில் பயனில்லை, ஆனால் செபிப்பதிலும், அவரில் கொண்ட அன்பில் நம்பிக்கையில் நிலைத்திருப்பதுமே உண்மையான பக்தர்களுக்கு அழகு. இறைவனோடும், அயலவரோடும் கொண்டுள்ள உறவில் அனுதினம், படிப்படியாகவும் தொடர்ந்தும் வளர முயலுவவே ஆன்மீக வளர்ச்சி. எனவே தொடர்ந்து செல்வதும், விடாமல் முயற்சிப்பதும் ஒரு கிறிஸ்தவப் பண்பு. இறுதிவரை நிலைத்து வெற்றிபெற நன்மைகளைச் சுவைக்க எம் முயற்சிகளில் அயராது உழைப்போம். தொடர்ந்து செல்வோம்.

சுவாமி. ஜீவா போல் அ.ம.தி.

| | |
|---|---|
| யாத். 17:8-13 | மோயீசனின் கைகள் அசந்து போகவில்லை. |
| திமோ. 3:14-4:2 | பொறுமையோடு போதித்துக் கொண்டே இரும். |
| லூக். 18:1-8 | மனம் தளராமல் செபியுங்கள். |

## கலைநிலா

### கூத்து

பண்டைத் தமிழர் கலை
பாரோர் போற்றும் கலை
உண்மை வாழ்வை உணர்த்தி
உன்னதம் காட்டும் கலை

கதை ஒன்றினை யாத்து
காட்சிப் படுத்தும் கலை
இதை இன்று வரைக்கும்
ஏற்றிப் போற்றுவர் தமிழர்

ஆடலும் பாடலும் நிறைந்து
ஆனந்தம் அளிக்கும் கலை
ஊடலும் அதில் உண்டு
உவகை கொள்ளும் உள்ளம்

மரபுக் கலையினை உயர்த்த
மைந்தர் நாமும் விரைவோம்
தரத்தை பேணி நாளும்
தமிழர் கலையை வளர்ப்போம்

— சோபஸ்

□ □ □

### ஓவியர் S. அடைக்கலமுத்து (ஓர் அறிமுகம்)

(சென்ற இதழ் தொடர்)

கேள்வி:- இப்பொழுதும் கொழும்பு ஏற்றுமதி, இறக்குமதி ஸ்தாபனத்தில் நீங்கள் கடமையாற்றுகிறீர்களா?

பதில்:- இல்லை. 1958 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது நான் கொழும்பை விட்டு யாழ்ப்பாணம் திரும்பினேன். அப்போது எனக்குத் திருமணமாகி ஒரு வருடம் ஆகியிருந்தது. நம்பிக்கையிழந்து, ஊர் திரும்பிய நான் எனது மனைவியின் ஊராகிய மல்லாகத்தில் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றை உருவாக்கி நடாத்தி வந்தேன். அதில் எனக்கு நஷ்டம் ஏற்பட்டது. அதனால் அத்தொழிலை கைவிட்டு, எனக்கு மனமகிழ்ச்சியை ஏற்படுத்திய ஓவியக்கலையை தொழில் ரீதியாக பயன்படுத்த ஆரம்பித்தேன். இன்றுவரை அதனையே தொழிலாக மேற்கொண்டு வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்




## 6. முரண் அரணனது

சின்னப்பர்...
சீரிய சிந்தனையாளர்,
சிறந்த யூதர்.
கமாலியேலிடம் கல்வி கற்றவர்.
கொள்ளும் கொள்கையில் உடும்பானவர்.
அதனால்தான்...
முடியப்பரின் முடிவின் பின் முன்னணி நின்று
கிறிஸ்தவரை வேட்டையாடினர்.
அக்கொலைக்கும் துணைபோனர்.
கொலைஞரின் உடைகளைக் காத்து நின்றார்.

கிறிஸ்தவம் மனிதனின் கைவேலை.
அது யாவேயிடமிருந்து யூதரைத் திருப்புகிறது.
பழையதை மாற்ற முனைந்து பரமனையே நகைக்கிறது.
என்றெல்லாம் கருதி
ஒருநாள்...
தமாஸ்க்குக் கிறிஸ்தவரை அழிக்கக் கட்டளை பெற்று
அந்நகர் நோக்கிக் குதிரையேறினர்.
பசி நோக்காது கண் துஞ்சாது பயணம் செய்தார்.
தமாஸ்கை நெருங்குகையில்
திடீரென
பெரும் ஒளி
இடி முழக்கம்
கூடவே ஒரு குரல்,
"சவுலே! சவுலே! நீ என்னைத் துன்புறுத்துவதேன்"
குதிரை மிரள,
கண்கள் குருடாகி,
நிலை தடுமாறி,
கீழே விழுந்த அவர் கேட்டார்.
"ஆண்டவரே நீர் யார்?"
பதில் வந்தது.
"நீ துன்புறுத்தும் இயேசுதான் நான்"
ஆம்
உடல் துன்புற்றாலும் அதை உணருவது தலைதானே.
சின்னஞ்சிறுவருள் எவருக்கும் செய்வது இயேசுவின் பணிதானே

ஆறு திரும்ப மலையேறியது
பழுத்த பழம் மேலே பறந்தது

சின்னப்பர் கேட்டார்,
"அண்டவரே நான் என்ன செய்யவேண்டும்?"
பதில் வந்தது
"எழுந்து நகருக்குப் போ
நீ செய்யவேண்டியது உனக்குத் தெரிவிக்கப்படும்"
சின்னப்பர் எழுந்தார்
கண் தெரியாததால் கை பிடித்து அழைத்துச்செல்லப்பட்டார்.

அந்நகரில் அனனியா என்னும் ஒருவர் இருந்தார்.
பக்திமான்.
யூதர் அனைவரிடமும் நன்மதிப்புப் பெற்றவர்.
அவர் சின்னப்பரைக் காட்சியில் கண்டார்.
ஆவியால் ஏவப்பட்டவராய் சின்னப்பரிடம் சென்று
பார்வையளித்து,
போதித்து.
ஆவியால் திருமுழுக்கும் அளித்தார்.

இயேசுவின் எதிரி நண்பனானர்.
அழிக்கத் துடித்தவர் வளர்க்கத் துடித்தார்.
முரண்பட்டு நின்றவர் அரணென எழுந்தார்.
நற்செய்தியை உலகின் எல்லைவரை எடுத்துச் செல்ல
தினவு கொண்டார்.

விளைவு...
மூன்று நெடிய வேதபோதகப் பயணங்கள்.
தனிநபர்களுக்கும், குழுக்களுக்குமாய் பதினன்கு கடிதங்கள்.
கூடவே,
அடியுதைகள்.
பசி பட்டினி
சிறைவாசம்.
ஏச்சுகள், இகழ்ச்சிகள், கைவிடப்படுதல்கள், நோய்கள்.
சுற்றில்,
உரோமையில்,
இயேசுவுக்காய் கொடிய வாளால் மரணம்.

காலந்தப்பிய அப்போஸ்தலரான இவர்
'புறவினத்தாரின் அப்போஸ்தலர்' எனப்படுகிறார்.
இவர் பணியால் திருச்சபை
உலகின் கடையெல்லை எனக் கருதப்பட்ட உரோமை வரை
சென்றது

சென்ற இதழில் வந்த கொர்னேலியு பற்றிய பகுதியில் பின்வரும் வசனத்தைச் சேர்த்துப் படிக்கவும்.

இராயப்பர் ஒரு காட்சிகண்டார்
ஊர்வன, பறப்பன விலங்கினங்கள் அனைத்தும்
ஒரு விரிப்பில்
வானிலிருந்து அவர்முன் இறக்கப்பட்டன
கூடவே...

— சந்திரன்.

# பங்குத்தளங்களில்....

## தெல்லிப்பழையில்

தெல்லிப்பழையில் வீமன் காமப் பகுதியில் அமைந்துள்ள புனித யுவானியார் ஆலய விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை அதாவது 27-08-1989 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திருநாட் திருப்பலி காலை 7-30 மணி அளவில் அருள் குருக்கள் லோறன்ஸ், பெனற் ஆகியோர் இணைந்து வெகு சிறப்பாக ஒப்புக் கொடுக்கப் பட்டது. புனிதரின் திருச்சுருபப்பவனியும் இடம் பெற்று, திருச்சுருப ஆசீருடன் விழா இனிதே நிறைவெய்தியது.

ரு. அ. யோண்
தெல்லிப்பழை

★ ★ ★

## மன்னரில்....

மன்னார் மறைமாவட்ட மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்களின் தியானம் மருதமடு அன்னையின் திருப்பதியில் புரட்டாதித் திங்கள் 15-ம் நாள் மாலை 6 மணிக்கு செப வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. 13 பங்குகளிலிருந்து 90 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர். அது அவ்வப் பங்குத்தந்தையர்களினது ஊக்குவிப்பின் பலனாகும் என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். தியான மறையுரைகள் அருட்திரு. ஜீவா போல் அ. ம தி. அவர்களால் நடாத்தப்பட்டது. அருட்சகோதரி. அலிஸ் அவர்கள் அருட்தந்தையையும், மறை வாழ்வுக் கல்விப் பணியாளர்களையும் வரவேற்றார்.

அருட்தந்தை அவர்கள் தமது உரையிலே எமது அழைப்பை ஆழமாக்க முதலில் என்னையே நான் யாரென்று அறியவேண்டும் என்றும், அயலவருடன் உறவு கொள்ள இயற்கையாக இருத்தல், ஒத்துணர்வு கொள்ளும் தன்மை, செவிமடுத்தல், நிபந்தனையற்ற முறையில் ஏற்றுக்கொள்ளல், இலட்சியங்களைப் பகிர்தல், தீர்ப்பிடாதிருத்தல் எந்த நிலையிலும் தம்மைத்திருக்தல் என்பன தேவை என்றும், இவற்றிலும் மேலாக இறைவனுடன் நெருங்கிய முறையில் தொடர்பு கொள்ள அருட்சாதனங்கள் அவசியமென்றும் எடுத்துக் கூறினர்.

மறைப்பணியாளர்களுக்கு இறை உணர்வு, வாழ்வில் நம்பிக்கை, பண்புடமை நல்லுறவு மறையறிவு, ஆற்றல்கள், நியாயமான நடத்தை, பற்றுறுதி, அர்ப்பண உணர்வு, திறந்த மனம் ஆகிய பண்புகள் இருக்க வேண்டும் என்றும் கூறியவை எல்லோர் மனதிலும் நிறைந்த ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஒவ்வொருவரும் பலமணித் தியாலங்கள் இறைவனுடன் தனிமையில் உரையாடியது சஞ்சலம் நிறைந்த இன்றைய எமது வாழ்வுக்கு ஒளியை அது அளிக்கும் திருப்தியைத் தரக்கூடியதாக இருந்தது. அகற்ற சிகரம் வைத்தாற் போல் இறுதி நாள் மாலை வழிபாடு, "இறைவன் என்றும் எம்மோடு இருக்கிறார்" என்பதை, உணர்த்த வழிவகுத்தது

கருத்து மோதலின்போது இயக்குநர் அருட்திரு.நோபேட் அடிகளாரின் தெளிவான விளக்கமும், அதைத் தொடர்ந்து தலைவர் (ம வா. க. ப. ச.) எஸ் எஸ். பீரிஸ் அவர்களின் நன்றியுரையும் இடம்பெற்றது.

ஈற்றில் 18-ம் திகதி காலை நன்றித் திருப்பலியுடன் தியானம் இனிதே நிறைவுற்றது.

தகவல்:
திருமதி. சியாமளா றெஜீஸ்
செயலர்

✶ ✶ ✶

## யாழ் அடைக்....

அண்டி வருபவர்களுக்கு அடைக்கலமாய் இறைஞ்சுவோர்க்கு இன்னருள் புரிபவளாய் யாழ்- நகரின் மத்தியில் எழுந்தருளியிருக்கும் அடைக்கல அன்னையின் ஆலயப் பெருவிழாவானது கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவதின ஆராதனைகளுடன் நடைபெற்று பிறந்த நாளுடன் முடிவடைந்தது

விழாத் திருப்பலியானது அருள்திரு. கில்லரி ஜெபநேசன் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக அமைந்தது. திருப்பலியின்போது நவநாட்களில் அருளுரைகள் வழங்கிய அருள்குரவர் யேசுதாஸ் மறையுரை வழங்கினர். அவர் தமதுரையில் "அன்னைமரியாள் தன் எளிமையான வாழ்வின் மூலம் இறைவனுக்கு உகந்தவள் ஆனாள். அவள் இயேசுவின் அன்னையாக மட்டுமன்றி இயேசுவின் மறையுடலாகிய திருச்சபையின் அன்னையாக இருந்து அதனைப் பேணிவளர்க்கின்றாள். திருச்சபைக்கு இடர் சூழும்போது அதனைப் பாதுகாத்து வருகின்றாள். இன்றைய காலகட்டத்தில் எமது கத்தோலிக்கத் திருச்சபைக்குப் பல இடர்களும் எதிர்ப்புக்களும், தோன்றி வருகின்றது. எனவே எமது திருச்சபையைப் பாதுகாக்கும்படி அன்னையை வேண்டுவோம்" என்று கூறினர்.

அன்னையின் ஆசிரை வேண்டியும் அவள் நமக்களித்த நன்மைத்தனத்துக்கு நன்றிகூறும் முகமாகவும், அன்னையின் திருச்சொரூபப்பவனியானது ஆலயத்தை மையமாகக் கொண்டு சுற்றியிருந்த வீதிகளில் இடம்பெற்றது. அலங்கரிக்கப்பட்ட தேரில் அன்னை எழுந்தருளி வந்த நிலையானது கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது.

இறுதியில் பங்குத்தந்தையினால் திருச்சொரூப ஆசீர்வாதம் வழங்கப்பட்டு விழா இனிதே முடிவுற்றது. அன்னையின் அடைக்கலத்தில் அருள் பெறுவோமாக!

## செட்டிகுளத்தில்....

செட்டிகுளப் பங்கிலே கங்கங்குளம் என்னும் இடத்தில் அமைந்துள்ள புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா ஆவணித் திங்கள் 19-ம் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இத்திருவிழாவின் ஆரம்ப தின வழிபாடுகள் ஆவணித் திங்கள் 16-ம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. வழிபாடுகளைப் பங்குத் தந்தை அருள்திரு, லடிஸ்லாஸ் அடிகள் பக்திப் பரவசமாக உருக்கமுள்ள சிந்தனைகளை வழங்கி ஆரம்பித்து வைத்தார். வேதாகமத்திலே கூறப்பட்ட உயிருள்ள வார்த்தைகளைப் பயன்படுத்தி பாவத்தின் கொத்த வடிவங்களான பழிவாங்கும் உணர்வுகள், பொறாமை, அன்பின்மை பிறரது நற்பெயருக்குக் களங்கம் விளைவித்தல் போன்ற அந்தச் செயல்களை நேரடியான அனுபவங்கள், சம்பவங்கள் உருவகக் கதைகள் மூலமாகப் பக்தர்களின் சிந்தனைகளைத் தட்டி எழுப்பிப் பாவப் பிடியில் இருக்கும் பாறை போன்ற உள்ளங்களை உடையச் செய்து அதிலே அன்பு என்னும் நீரூற்று வழிந்தோடும்படி அனைவரும் புரிந்து கொள்ளும்படியாக அருளுரை ஆற்றினர். ஆவணி 18-ம் நாள் திருப்பலியுடன் நற்கருணை வழிபாடும் நற்கருணை ஆசீரும் இடம் பெற்றன. அன்னையின் தினமான 19-ம் நாள் காலை 7 மணியளவில் திருநாள் திருப்பலி ஆரம்பமானது. பங்குத் தந்தை அருள்திரு. லடிஸ்லாஸ் அடிகளாருடன் சேர்ந்து அருள் திரு. தேவசகாயம்பிள்ளை அடிகள் கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள். அருள் திரு. தேவசகாயம்பிள்ளை அடிகளார் தமது மறையுரையில் அன்னையின் வாழ்வைப் பின்பற்றிப் பாவவாழ்க்கையில் இருந்து விடுபட்டு நல்ல வாழ்வு வாழ அழைப்பு விடுத்தார். மனித அமைதிக்காகவும் சின்னபின்னமாக்கப்பட்டு அவல ஓலமிடும் சகோதரர்களுக்காகவும் வாழ்க்கையிலே இழப்புக்களையே எந்நேரமும் சந்திக்கின்ற உடைந்த உள்ளங்களுக்காகவும் செபித்த மன்றாட்டுக்கள் இறைவனில் கொண்ட அழியாத நம்பிக்கையின் ஒளியாக ஆன்மீகரீதியில் சிந்தனையைத் தூண்டுவதாகவும் வாழ்க்கையிலே திருப்பு முனையைச் சந்திப்பதற்கு வழியாகவும் அமைந்தது. திருப்பலியின் முடிவில் புனித வேளாங்கண்ணி அன்னையின் திருச்சுரூபப்பவனி இடம் பெற்றது அன்னையின் அருள் வரம் வேண்டிப் பல இடங்களிலிருந்தும் பெரும் திரளான மக்கள் ஆரோக்கிய அன்னையின் பக்தர்கள் திருச்சுரூபப் பவனியில் கலந்து கொண்டனர் பவனியைத் தொடர்ந்து அலைகடலாக அன்னையின் பாதமதில் சரண்புகுந்து வரம் கேட்ட பக்தர்களுக்கு ஆசீர் வழங்கப்பட்டதுடன் இவ்விழா நிறைவெய்தியது.

நன்றி
தகவல்: செலவி மரி அகஸ்ரீன்
முதலியாகுளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை மாறிய பயணம்

அந்தப் பஸ் தென்காசியிலிருந்து நெல்லையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. ஆண்டிப்பட்டி பஸ் ஸ்டாண்டில் ஒரு சகோதரி சிஸ்டர் ரோஸ்லின் மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தார். பஸ் நிற்க சகோதரி ஏறிக்கொண்டாள். பஸ்ஸில் அதிகக் கூட்டமில்லைத்தான். எனினும் இருக்கைகள் காலியாக இல்லை. இருவர் அமரக் கூடிய அந்த இருக்கையில் 30 வயது மதிக்கத் தக்க அந்தக் கர்ப்பிணி மட்டும் அமர்ந்திருந்தாள். சற்று ஒதுங்கியிருந்து சகோதரிக்கு இடம் அளித்திருக்கலாம். ஆனால் அவள் சகோதரியைக் கண்டவுடனே இன்னும் அதிகமாக அந்த இருக்கை முழுவதையுமே ஆக்கிரமித்துக் கொண்டாள். அவள் முகத்தின் கடுமை அந்த அருட் சகோதரியை வெறுக்கிறாள் என்பதைக் காட்டியது. கர்ப்பிணிப்பெண் தன்பக்கத்து இருக்கையிலிருந்த ஒரு பெண்ணிடம் தானாகவே பேசத் தொடங்கினாள் "துறவிகளுக்கு என்ன கவலையற்ற நல்ல சாப்பாடு, நிம்மதியானவாழ்க்கை, துறவற வாழ்க்கையெல்லாம் வெறும் போலி வாழ்க்கை. தவமாவது, மண்ணாவது" சிஸ்டருக்குக் கேட்கட்டும் என்று சத்தமாகப் பேசினாள்.

சகோதரியின் நினைவலைகள் கடந்த காலத்தை மனக்கண் முன் கொணர்ந்தன.

சகோதரி ரோஸ்லின் அப்போது தென்காசி கான்வென்ட் பள்ளியில் தலைமை ஆசிரியை. இந்தக் கர்ப்பிணி லட்சுமி தன்னிடம் உதவி ஆசிரியையாகப் பணிபுரிந்தவள்.

அவளின் தவறான போக்கைக் கேள்வியுற்ற சிஸ்டர் ரோஸ்லின் கான்வென்டின் ஒழுக்கத்தின் நற்பெயரை நிலை நாட்ட பிற ஆசிரியைகளின் நலனைக் காப்பாற்ற இந்த லட்சுமியை கான்வென்டை விட்டு வெளியேற்றியதற்காக தன்மீதே வீண்பழியைச் சுமத்திய அதே லட்சுமி.

சிஸ்டர் ரோஸ்லினின் உதடுகள் முணுமுணுத்தன. 'பாவிகளை நேசித்த இறைவா! உம்மைச் சிலுவையில் அறைந்தவர்களையே அன்பு செய்த இறைவா! நானும் என்பகைவரையும் அன்பு செய்யும் மனதைத் தாரும்."

திருநெல்வேலியை நெருங்க இன்னும் பல மைல் தூரம் இருந்தது. அதற்குள் பஸ்ஸினுள் ஒரு பெண்ணின் முனகல்... பரசவ வேதனையின் எதிரொலியாய் பஸ் முழுவதும் அதிர வைத்தது. ஆம் லட்சுமி பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந்தாள். இனிமேல் பஸ்ஸை நகர்த்த முடியாது என்று தெரிந்தவுடன் ரோட்டின் ஓரமாக பஸ் நிறுத்தப்பட்டது, பஸ் ஒரு மருத்துவ மனையாகியது.

எத்தனையோ பெண்கள் இருந்தும் அத்தனை பேரும் செய்வதறியாது விழித்துக் கொண்டிருந்த வேளையில் சகோதரி ரோஸ்லின் ஏற்கனவே நேர்ஸ் பயிற்சி பெற்று பிரசவ மருத்துவ மனையையும் நிர்வகித்த தனது அனுபவத்தினால் அங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த லட்சுமிக்குத் தாயாக மருத்துவத் தாதியாக, ஏன் தெய்வமாகவே நின்று தாயையும், சேயையும் காப்பாற்றி விட்டாள்.

"லட்சுமி நான் என்ன பெரிதாகச் செய்து விட்டேன்? அயலானை நேசி பகைவனுக்கும் அன்புசெய் என்று கூறிய இறை மகன் யேசுவின் வார்த்தையைத் தானே நிறைவேற்றினேன்' அயலானை நேசி. பகைவனுக்கு அன்பு செய் என்ற இறை மகனின் வார்த்தைகள் அவள் இதயத்தில் மீண்டும் மீண்டும் எதிரொலித்தன.

## சிறுகதை

அழகான ஒரு பெண்குழந்தையைப் பெற்றெடுத்த லட்சுமி கண்களில் நீர் மல்க சகோதரியின் கரங்களைப்பற்றி கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

"சிஸ்டர் அன்று தென்காசியில் நான் செய்த தவறை உங்கள் மீது பழி சுமத்தினேன். இன்று பலர் முன்னிலையில் அவமானப் படுத்தினேன் நீங்கள் எனக்கு செய்த உதவிகளை எல்லாம் மறந்து நன்றி கெட்டவளாயிருந்தும் இன்று இந்தப் பாவி மேல் இவ்வளவு அன்பு காட்டினீங்களே. சிஸ்டர் இந்தப் பாவியை மன்னிப்பீர்களா?

லட்சுமியின் கண்ணீரைத் துடைத்தபடி சிஸ்டர் தன் குழந்தைக்கு சிஸ்டர் ரோஸ்லின் பெயரையே வைத்து தானும் ஒரு கிறிஸ்தவ தாயாக இருந்து தன் குழந்தையை இறையன்பிலும், பிறரன்பிலும் சிறந்தவளாக வளர்த்து சிஸ்டர்ரோஸ்லினின் வாரிசாக உருவாக்க வேண்டும் என முடிவெடுத்தாள்.

பஸ் மீண்டும் பயணிகளை ஏற்றிக் கொண்டு தன் பயணத்தைத் தொடர்ந்தது. அங்கே ஒரு ஜீவன் தான் கடந்து வந்த பாதையை விட்டு மாறிப் புதுப்பாதையில் பயணம் செய்யப் பொங்கும் புதுபபுனல் உள்ளம் உவகை கொள்ள தன் புதுப் பயணத்தை ஆரம்பித்தது.

ஜெபமாலை (றஜனி)
சென்ஜேம்ஸ் வீதி,
வசாவிளான்

---

# இறைவன் உன்னை அழைக்கின்றார்

இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினால் (1-10 89) அன்று காலை 10-30 மணக்கு இளைஞர் யுவதிகளுக்கான மேற்கூறிய தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று யாழ். புனித மரியன்னை பேராலய புனித ஞானப்பிரகாசியார் மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கு இறைவனின் அழைத்தல் எத்தகையது என்பதையும். அவ் அழைத்தல்கள் பெருகவேண்டும் என்பதையும், குருத்துவ அழைத்தலின் மாண்பையும் இளைஞர்களுக்கு எடுத்தியம்பும் முகமாக ஒழுங்கு செயயப்பட்டிருந்தது.

இக்கருத்தரங்கில் "எம் பங்கில் இறை அழைத்தலின் நிலை" என்ற தலைப்பில் பேசி பேராலயப்பங்குத்தந்தை அருட்திரு. S. H. ஜெபநேசன் அடிகளார் பங்கின் இன்றைய நிலைமையையும், இறைவனின் அழைத்தலுக்கு முழுமையான தியாகம வேண்டும் எனவும் அவ்வாறான தியாகம் நிறைந்த இளைஞர்கள், யுவதிகள் துறவற அழைத்தலுக்கு செவிகொடுக்க வேண்டும் எனவும் அழைத்தார்.

அவரின் உரையைத் தொடர்ந்து சிறப்புரை ஆற்ற வந்த அருட்திரு. A. ஸ்ரீபன் அடிகளார் (செபமாலைத்தாசர் சபை) ஆபிரகாமின் காலத்தில் ஆரம்பித்த இறை அழைத்தலானது இயேசுவில் எவ்வாறு முழுமை அடைந்து, இன்று எம் ஒவ்வொருவருக்கும் எவ்வாறு அழைப்பு விடுக்கின்றது என்பதைப்பற்றி வேதாகமத்தோடு ஒப்பிட்டு உதாரணம காட்டி விளக்கினார். அத்தோடு இன்று யாழ். மாவட்டத்தில் பணியாற்றிவரும துறவற சபைகளைப் பற்றியும் குறிபபிட்டார்.

அடுத்த சிறப்புரையை நிகழ்த்தியவர் அருட் செல்வி. ஸ்ரெலா டஷ்பம் (திருக்குடும்ப கன்னியர் சபை) அவர் தன் உரையல் அன்றாடப் பிரச்சனைகளைபபற்றி ஆணித்தரமாக விளக்கி அதிலே இறைவன எவ்வாறு எம்மைத் தனது பணிக்கு அழைக்கின்றார் என்பதைப் பற்றியும விளககினார். அழைத்தல் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும இறைவனால் அளிக்கப்படும் ஓர் கொடை என்பதையும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்ட தவறவில்லை. சிறப்புரைகளைத் தொடர்ந்து கேள்வி நேரம் ஒதுக்கபபட்டது. பலசந்தேகங்களை நிவர்த்தி செயயக்கூடியதாக அக் கேள்வி நேரம அமைந்திருந்தது. இக்கருத்தரங்கிலே பேராலய இணைப்பு பங்குத்தந்தையும், இளைஞர் உருவாக்கல் இயக்க இயக்குனருமான அருட்திரு எட்மண் மைக்கல் (அ. ம. தி.), உதவிப் பங்குத்தந்தை அருட்திரு. அன்ரனி பாலா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இளைஞர் உருவாக்கல் இயக்கம் யாழ். மரியன்னை பேராலயம்




புனித கப்பிஸ்திராஸ் அருளப்பர் -அக்டோபர் -23
[கி பி. 1386 1466]

இத்தாலி நாட்டில் அப்ருசி மலையில் கப்பிஸ்திரானே என்ற ஊரில் தோன்றி சட்டக்கலையில் பயிற்சி பெற்று 27 ஆவது வயதில் பெருஜியா மாகாணத்தின் அதிபரானார். பெருஜியா நகரத்தில் குழப்பம் ஏற்பட்டபோது அங்கு சமாதானத்தை நிலைநாட்ட இப்புனிதர் சென்ற போது இவரை எதிர்த்து ஒரு குகைக்குள் தள்ளினர். கைதிபோல் குகைக்குள் இருந்த போது உலக வாழ்வு எவ்வளவு வீணானது என்று உணர்ந்தார். புனித பிரான்சிஸ் அசிசியார் கனவில் தோன்றி கூறிய படியே பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து 1425 ஆம் ஆண்டு குருவானார். பின்னர் இத்தாலி நாட்டில் பல பெரிய நகரங்களில் வேதப போதித்தார். பாப்பு கூறிய படி சிலுவை யுத்தத்திற்கு முன்னர் சொற்பொழிவுகள் ஆற்றினார். இதனால் ஆயிரக்கணக்கானவர் போரில் இறங்கினர். இப்புனிதர் சிலுவையைக் காண்பித்து போர்வீரர்களை ஊக்குவித்து யுத்தத்திலே வெற்றிகண்டார்.

புனித அந்தோனி மரிய கிளாரெட் அக்டோபர் -24
[கி. பி. 1807 -1870]

ஸ்பெயின் நாட்டிலே கட்டலோனியா என்ற நகரத்திலே கம்பளி நெய்பவரின் குடும்பத்திலே தோன்றி அந்த தொழிலைச் செய்தார். பின்னர் தேவ அழைத்தலுக்குச் செவிசாய்த்துக் குருமடத்தில் சேர்ந்து படிப்புக்களை முடித்து 1835 ஆம் ஆண்டு குருவானார் முதலில் தன் நாட்டிலும் பின் கனேரித் தீவுகளிலும் வேத போதக அலுவலைச் செய்தார். பின்னர் 1849 ஆம் ஆண்டு ஆர்வம் மிகுந்த குருக்களைத் தம்முடன் சேர்த்து தேவ தாயின் பெயரால் ஒரு சபையை நிறுவினார். இதற்கு இரண்டாண்டுகளுக்குப் பின் பேராயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் 130 க்கும் அதிகமான புத்தகங்கள் எழுதினார். 1870 ஆம் ஆண்டு காலமானார். இதற்கு 27 ஆண்டுகளுக்கு பின் இவரது கல்லறையை திறந்து பார்த்த போது இவருடைய இருதயம் அழியாதிருந்தது. 1950-ம் ஆண்டு இவருக்குப் புனிதப் பட்டம் கொடுக்கப்பட்டது.

S. S. கருணைதாஸ்
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை

---

## மறைபரப்பு

மறைபரப்பு என்றவுடன்
— எம்மை
மறந்து விடுகின்றோம்.
ஆம்.
குருக்களும், துறவிகளுக்குமே
அப்பொறுப்பு — என்று
எம்பொறுப்பை
மறக்கின்றோம்.
மனிதனாய்ப் பிறந்த
மானிடரனைவரும்
மறைபரப்புப் பணியை
மறக்கலாகாது.
மறுக்கலாகாது.
'அது என்மேல்
சுமத்தப்பட்ட பணி"
என
சின்னப்பனோடு — சேர்ந்து
மறைபரப்புவோம்.

அன்புக்குழந்தை
புனித யாகப்பர் கோயிலடி
முருங்கன்

---

## திருச்சபை

கிறிஸ்துவின் பெயரால்
கூடிவாழும் மக்களே
திருச்சபை.
பிரச்சனை — எங்கும்
பிளவுகள்
திருச்சபையில் பிரச்சனை.
ஆம்.
மறைக்கு எதிராக
குறைகாணும்
மக்களால் பிரச்சனை.
கறையுள்ள மக்கள்
மறையில்
குறைபிடிப்பது
நிறைவல்ல — அத்தோடு
முறையல்ல.

அன்புக்குழந்தை
புனித யாகப்பர் கோயிலடி
முருங்கன்

---

## நங்கையரும் நாடுகளும்

1) மனித அன்பின் பிறப்பிடம் தாய். (பெல்ஜியம்)
(2) கோபமுற்ற பெண் கரையில்லாத கடல் போன்றவள். (இத்தாலி)
(3) தாயின் இதயம், குழந்தையின் பள்ளிக் கூடம். (அமெரிக்கா)
(4) பெண்ணின் மிகச் சிறந்த சீதனம் அவள் அழகு. (ஜேர்மனி)
(5) பெண் இல்லாத வீடு பேய் வாழும் இடம். (இந்தியா)
(6) ஒரு பெண் இன்னொரு பெண்ணை ஒரு போதும் புகழ்வதில்லை. (எஸ்தோனியா)
(7) பெண் கண்ணால் கேட்கிறாள், அடைகின்றாள், ஏளனம் செய்கிறாள். (ஸ்பெயின்)

## எழுத்தாள அன்பர்களுக்கு!

'காவலனில்' பிரசுரிக்க, ஆக்கங்களை அனுப்பும் போது எந்த இதழுக்கு பிரசுரிக்க வேண்டுமோ அந்தத் தேதியிலிருந்து பத்து நாட்கள் முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக, உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

ஆ—ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பின்னணி என்ன?

மனிதன் இறைவனின் படைப்பின் சிகரம். அந்த மனிதனின் உணர்ச்சிகள் பல விதம். அவற்றுள் இறைவனின் அரும் பெரும் கொடையாக இருப்பது அன்பு. ஆம். இந்த அன்பைப்பற்றி புனிதசின்னப்பர்! கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் வெகு ஆழமாக சித்தரித்திருக்கிறார்.

மனிதன் தான் எல்லோராலும் அன்பு செய்யப்படவேண்டும் என்று விரும்புகின்றான். அதற்காக ஏங்கித்தவிக்கின்றான். தான் எதிர்பார்த்த அன்பு கிடைத்துவிட்டால் தன்னை மறந்து தான்வாழும் உலகை மறந்து அளவிட முடியாத மகிழ்ச்சியில் மூழ்குகின்றான். ஆனால் அந்த அன்பு கிடைக்காது விட்டால் தவித்துத் துடிக்கின்றான். அவன் உள்ளம் சோககானம் இசைக்கிறது. உலகம் வெறுமையாக அவனுக்குத் தெரிகிறது. இப்படி அழிந்துபோகும் அன்புக்காக பல இதயங்கள் ஏங்குகின்றன. அழியாத ஆண்டவரின் அன்புக்காக எத்தனை இதயங்கள் ஏங்குகின்றன? நம்மை, கண்ணை இமைகாப்பதுபோல் காத்துவரும் கர்த்தர்யேசுவை நாம் உற்ற நண்பனாக ஏற்கவேண்டும். அன்பு உணர்வை இதயத்திலே ஏற்படுத்திய யேசு, அதன் கொடுமுடியாக தன் உயிரையேதந்து அன்பு சாவைவிட மேலானது என்று எண்பித்து விட்டார்.

நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு எது என்று நவின்ற நாதன் அதனை செயலாக மாற்றிவிட்டார். இத்தகைய நாதனின் அன்புக்காக ஏங்கும் இதயங்களாக நாம் மாறவேண்டும். அவரது இதயத்தில் ஊற்றெடுக்கும் அன்பை எமது இதயத்தில் பாய்ச்சவேண்டும். தரணியைக்காக்க தன் உயிரைத்தந்த தன்னிகரில்லாத்தலைவனை நாம் எமது சகோதரனாக, நண்பனாக, கணவனாக ஏற்க வேண்டும். புனிதசிலுவை அருளப்பர் கூறுவதுபோல் நமக்கிருக்கும் துன்பச்சிலுவைகளை அவர் மீதுள்ள அன்பின் சின்னமாக சுமந்துசெல்வோம்.

இதற்கெல்லாம் முதற்படியாக நாம் அவனியில்வாழும் மனிதர்களை அன்பு செய்வோம். நம் நண்பர்களோடு கொண்டுள்ள அன்பை இறைவனுடன் ஒப்பிட்டு வளர்ப்போம். தம் வாழ்வில் அன்பேகாணாது அல்லலுறும் நொறுங்கிய உள்ளங்களில், உடைந்த உள்ளங்களில் அன்புநீரைப்பாய்ச்சுவோம். அப்போதுதான் நான் உங்களுக்கு அன்புகூர்ந்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு கூரவேண்டும் என்று கூறிய கிறிஸ்துவின் சத்திய போதனையை சாதனையாக்கும் செயல் வீரராவோம்.

''அன்பே தான் கடவுள்''
சி. அன்ரன் கனியூட்
முல்லைத்தீவு

---

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
20-10-1989




அன்பு இளம் உள்ளங்களுக்கு

சிறுக விதைப்பவன்
சிறுக அறுப்பான்;
பெருக விதைப்பவன்
பெருக அறுப்பான்.

ஒவ்வொருவனும் தன் உள்ளத்தில் முடிவுசெய்தவாறு கொடுக்கட்டும். முகவாட்டத்தோடோ, கட்டாயத்தினாலோ கொடாதீர்கள்; ஏனெனில், முகமலர்ச்சியுடன் கொடுப்பவன் மேல் தான் கடவுள் அன்பு கூர்கிறார்.'' (2 கொரி. 9: 6-7)

நலமான வாழ்விற்கு. வளமான வாழ்விற்கு ஒரேயொரு வழி கொடுப்பதும், கொடுத்துக் கொண்டேயிருப்பதுமாகும் நல்மனத்தோடு, தாராள மனப்பான்மையோடு பிறர் நல்வாழ்வினை முன்வைத்து எம்மை எம்மிடம் உள்ளனவற்றைக் கொடுக்க முற்படுவது எமது ஆளுமையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இட்டுச் செல்வதாகும். எமது சுயநல நோக்கிற்காக புதைத்து வைக்கப்படும் ஒவ்வொன்றும் இழந்துபோனபொருளுக்குச் சமானமானதாகும். எமது சொந்த மகிமைக்காக கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பவை அனைத்தும் காலகட்டத்தில் பறிக்கப்படும். அன்றேல் பயனற்றதாக்கப்படும். எனவே,

இருப்பதைப் பயன்படுத்துவோம்; அன்றேல்
இழந்துவிடுவோம், பிறர் பயன்படுத்தும்படி,

நல்வாழ்த்துக்களுடன்,
அன்பு நெஞ்சன் வி. பி.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு—48

அடைக்கலம்:- எங்கட பங்கில இப்ப இருநூறுக்கு மேல விக்குதண்ணை பாதுகாவலன்.

குருசுமுத்தண்ணை:- ஏன் தம்பி ஆக இவ்வளவு கத்தோலிக்க குடும்பங்கள் தானே இருக்கு உங்கட பங்கில?

அடைக்கலம்:- அதில தொகையை பாத்தா அண்ணை அடிக்கிற பாதுகாவலன் அவ்வளவும் எங்கட பங்கிற்கு காணுதண்ணே.

குருசுமுத்தண்ணை:- அப்ப தம்பி அவையளுக்கு இதை படிக்க ஏன் வெக்கமாமே?

அடைக்கலம்:- அண்ணே கிழமைக்கு ஒருக்கா ஒண்டரை ரூபாய் குடுக்க கஞ்சத்தனம். ஆனா கொலை கொலையா எழுதினா ஓடி, ஓடித் தினம் படிப்பினம் அண்ணே.

குருசுமுத்தண்ணை:- தம்பி அவையள சாட்டாச் சொல்லி தப்பாம அவையளையும் திருத்த, இப்ப பாதுகாவலன் படிக்கிற நீங்கள், ஒவ்வொருவரும் மூண்டு பேரை வேண்டப்பண்ணி ஞான அறிவை பகிர முனைந்தா இது கூட நற்செய்தி பரப்பும் செயல்தானே பாரு.

## மறையின் ஒளிதனில்..

மறையின் ஒளிதனில்
மங்காது வாழ்ந்திட
மறைமொழியாம்
மாபரனின் நல் செய்தியினை
மறக்காமல் படிப்போம்,
மடியாமல வாழ்வோம்,
விசுவாச வித்தினை
வளர்த்திடச் செய்குவ
விசுவாச உண்மையை
வளத்துடன் வாழ்ந்திடுவோம்.
அயலவனுக்கு அன்பு செய்திட,
பகைவனை அன்பு செய்திட,
அறத்தினை வளர்த்திட,
அன்பு இறைவன்
வாழ்வெளிதனில்
வாழ்ந்திடுவோம்.
எளியவனை அன்பு செய்திட,
ஏழை எளியவர்களில்
இறைவனைக் கண்டிட
மறைமொழியில்
சரணடைவோம்.

அருளமலன்
நாவாந்துறை

அப்போஸ்தலனாக!...
இடைவிடாது
செபியுங்கள்.
தினந்தோறும்
திவ்விய நன்மை
அருந்துங்கள்.
இயன்றவரை
தியாகச் செயல்களைச்
செய்யுங்கள்.




''என்ர அப்புவும், ஆச்சியும் கலியாணப்பூசை முடிய இரண்டு பெரிய மொழுகு திரியைத்தந்து ''சண்டை சச்சரவு இல்லாமல் பிரமாணிக்கமாய் பத்து பிள்ளைகளையும் பெத்து ஒண்டாய் இருக்கவேண்டுமெண்டு அந்தோனியாருக்கு முன்னாலை கொழுத்து எண்டு சொல்லி மொழுகுதிரியை கொழுத்துவிச்சவை. அந்தோனியாரே எண்டு நாங்களும் கிளடுகளாய் வந்து விட்டோம். எங்களுக்கு பிள்ளைகள் தான் பிறக்கேல்லை எண்டாலும் இன்னும் ஒற்றுமையாய் பிரமாணிக்கமாய்த் தான் இருக்கிறோம்.'' ஒரு வயோபக் குடும்பத் தலைவி தன் அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டாள்.

''போய் மொழுகுதிரி கொழுத்து'' எண்டகாலம் போய் ''கெதியாய் வாங்கோ ஸ்ரூடியோவிற்கு போக'' அல்லது ''வீடியோக்காறன் போகப்போறான்'' என்ற காலத்திற்குள் நாம் வேகமாக வந்து விட்டோம்.

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப்பயிர். அரைகுறை ஆயத்தத்தோட இந்த ஆயிரம் காலத்துக்குள் நுழைகின்றவர்கள் ஆரம்ப அனுபவத்துடன் இணைய முடியாத இரண்டு துருவமாகி விடுவதும் இன்று அனுபவமாகி விட்டது.

திருமண ஆயத்தம் என்பது மிக முக்கியமானது. திருமணத்திற்கு முன் இதைமுழுமையாகச் செய்ய முடியாதவிடத்து திருமணத்தின் பின் எவரும் இதை செய்தால் இணைய முடியாத இரண்டு துருவங்களாகும் நிலையை ஓரளவு குறைக்கலாம் என்று அபிப்பிராயப் படுகிறார். பிரபல திருமண ஆலோசகா போல் பொப் பியூனோ Paul Pope noe

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

## ''உங்கள் கனவுகளை நனவாக்குங்கள்''

### முன்னுரை

''திருமணம் என்பது நீங்களே ஆக்கிக்கொள்வது'' என்ற பிரபலநூலின் ஆசிரியரும், தலைசிறந்த திருமண ஆலோசகருமான போல் பொப்பியூனோ அந்நூலை முதத்தொடங்கும் போது பின்வருமாறு கூறுகிறார், ''பெரும்பாலான திருமணங்கள் போதிய ஆயத்தம். ஆலோசனை, வழிநடத்தல்கள் இல்லாத காரணத்தால் அனுகூலமற்று. தோல்வியில் முடிகின்றன. திருமணத்தின் முன் நன்கு ஆயத்தப்படுத்த முடியாதவிடத்து மணமானபின்பாவது நல்லமுறையில் வழிநடத்தப்பட்டிருந்தால் மணமுறிவு, பிரிவு. போன்ற துர்ப்பாக்கியமான நிலை ஏற்படாமல் தவிர்த்திருக்கமுடியும்

இந்த வார்த்தைகள், மணமானவர்களுக்கும், மணமாக இருப்பவர்களுக்கும், எச்சரிக்கையோடு உற்சாகத்தையுமூட்டுகின்றன. திருமணத்தை எதிர்நோக்கும் இளைஞர், யுவதிகளில் எத்தனைபேர் திருமணவாழ்வுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று எண்ணுகிறார்கள்? மணவாழ்வில் தம்பதிகளின் மகிழ்ச்சி. பிள்ளைகளின் மகிழ்ச்சி. சமுதாய நலன் எல்லாமே ஆரோக்கியமான இனிய குடும்பவாழ்விலேதான் தங்கியுள்ளன மணவாழ்வில் பிரவேசிக்கும் ஆண். பெண் இருபாலாருக்குமே எவ்வித ஆயத்தமோ வழிநடத்தல்களோ — மணவாழ்வுபற்றிய ஆதார அறிவோ இல்லாது போனால் மேற்கூறிய நல்விளைவுகளை — நற்பயன்களை எவ்வாறு அடையமுடியும்?

இளம் வயதில் திருமணமாகிவிட்டால் மணவாழ்வின் வெற்றிக்கு அது உத்தரவாதமளிக்கும் எனபலர் அபிப்பிராயப்படுகிறார்கள் ஆயினும் கசப்பான பல உண்மைகளும், அனுபவங்களும் இந்த நம்பிக்கைகளைச் சிதறடித்து விடுகின்றன இளம் தம்பதிகளிடையே பெருகிக்கொண்டுவரும் பிரிவினைகளும், மணமுறிவுகளும். மணவாழ்வில் போதிய ஆயத்தமோ, அறிவுறுத்தல்களோ, வழிகாட்டுதல்களோ இல்லாமையின் குறைபாட்டை ஆதாரபூர்வமாய் எடுத்துக்காட்டுகின்றன

நம் உலகவாழ்வில் அதிமுக்கியத்துவமற்ற சிக்கல்களும், பிரச்சினைகளும் குறைந்த பல விடயங்களுக்கு கடுமையான பயிற்சிகளும், அதிக முன்னேடி ஆயத்தங்களும் தேவைப்படுமெனில், திருமணம் பெற்றோர் அந்தஸ்துப்பெறுதல், போன்ற காத்திரமான இவ்விடயத்தில் எதுவித வழிகாட்டலோ, பயிற்சியோ ஆயத்தமோ இன்றி எளிதாக அனுகூலமடையலாம் வெற்றி காணலாம் என்று எதிர்பார்ப்பது வியப்பாக வில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறிய இறைவாக்கினர்-37.

### மலக்கியாஸ்-1.

சிறிய இறைவாக்கினர்களின் நூற்கள் தொகுப்பில் பெயர் குறிப்பிடப்படாத மூன்று இறைவாக்கு தொகுப்புகள் காணக் கிடக்கின்றன.

ஒன்று சக். 9:1ல்; இரண்டாவது 12:1ல், மூன்றாவது மலாக்கி 1:1ல்) 'ஓர் இறைவாக்கு' என்ற தலைப்போடு இந்த மூன்று தொகுப்புகளும் இடம்பெறுகின்றன.

சிறிய இறைவாக்கினர்களின் நூல்களைப் பன்னிரண்டு நூற்களாக அமைக்கும்போது பெயர் குறிப்பிடப்படாத இம் மூன்று தொகுப்புகளில் முதல் இரண்டு தொகுப்புக்களும் சக்கரியாஸ் ஆகமத்துடன் சேர்க்கப்பட்டன. இப்பகுதி சக். 9 ஆம் அதி முதல் 14ஆம் அதி. வரை உள்ளவை. மூன்றாவது தொகுதி மலாக்கி என்னும் எபிரேயச் சொல்லிற்கு ''என் தூதன்'' என்று பொருள்.

மலக்கியாஸ் இறைவாக்கினர் நாட்டுப்பற்றுடையவர். பிற இனத்தவரிடையே நிலவிய பாலின வழிபாட்டு முறைகள், கலப்புமணம் போன்றவற்றைக் கண்டிக்கின்றார். தனது சமயத்தின் மட்டில் ஆழ்ந்த பற்றுக்கொண்டிருந்ததால் யூதக் குருக்களின் அறியாமையையும், சலுகை தேடுவதையும் பேராசை கொள்வதையும் வன்மையாகக் கண்டிக்கிறார். சமய காரியங்களில் ஆர்வமற்ற மக்களை தனது போதனையால் தட்டி எழுப்புகிறார். 'ஆண்டவரின் நாள்' பற்றி எடுத்துக்கூறி மக்களை மனம் மாற அழைக்கின்றார்.

இந்நூலில் காணப்படும் ஆறு இறைவாக்குகளும் கேள்வி பதில் அமைப்பில் உள்ளன. ஒவ்வொரு இறைவாக்கிலும் இறைவாக்கினர் முதலில் ஒரு செய்தியை அறிவிக்கின்றார். இது செவிமடுப்பவர்களிடையே முறைப்பாட்டையும், கேள்வியையும் எழுப்புகின்றது. அதற்கு இறைவாக்கினர் விடை அளிக்கிறார் இது அவர் காலத்து மக்களிடையே நிலவிய ஆர்வமற்ற, பகுத்தறிவுவாத, சமயப்பற்றற்ற போக்கைப் பிரதிபலிக்கிறது.

—கி. சா. பங்கிராஸ்

## அன்னை மரியாள் அளிக்கும் 15 வாக்குறுதிகள்

(திருச்செபமாலையைப் பக்தியுடன் செபிப்பவர்களுக்கு புனித கன்னிமரியம்மாள் புனித சாமிநாதர் மூலமும், புத்திப் பேறுபெற்ற அலன் றோச் மூலமும் இவ்வாக்குறுதிகளை அளிக்கின்றாள்)

(1) எனது செபமாலையைப் பக்தியுடன் செபிக்கும் அனைவருக்கும், எனது விசேட பாதுகாப்பை அளிப்பேன். என்றும், பெரும் வரப்பிரசாதங்களை அருளுவேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

(2) எனது செபமாலையைச் சொல்வதில் தீவிர முயற்சி எடுப்போர், ஒரு சில விசேட வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வர்.

(3) திருச்செபமாலை நரகத்திற்கு எதிரான ஒரு மிகுந்த சக்தி வாய்ந்த ஆயுதமாகும். அது தீமையை அழித்து, பாவத்தினின்றும் இரட்சித்து, பதிதக் கொள்கைகளை அகற்றும்.

(4) செபமாலை நல்லியல்புகளையும், நற்கருமங்களையும் பெருகச்செய்து, தேவ இரக்கத்தை ஆன்மாவிற்குப் பெற்றுத்தரும். இதயங்களில் உலகப் பற்றுதல்களுக்குப் பதிலாக இறைஅன்பை உண்டு பண்ணி பரலோகத்துக்கேதுவான நித்திய நன்மைகளை அவாவத்தூண்டி, அவர்களை உயர்த்தும், இந்த வழிவகையினைக் கைக்கொண்டு ஆன்மாக்கள் புனிதத்துவத்தை அடைந்து கொள்வார்களாக.

(5) செபமாலை மூலம் என்னில் நம்பிக்கை வைக்கிறவர்கள் சீரழிந்து போக மாட்டார்கள்.

(6) எனது செபமாலையைப் பக்தி வணக்கத்துடன். சொல்லி அதன் இரகசியங்களைத் தியானிக்கின்றவர்கள். இன்னல்களினால் மேற்கொள்ளப்படமாட்டார்கள். துர்மரணம் அடையமாட்டார்கள். பாவிகள் மனம் திரும்புவர். நீதிமான்கள் அருளில் வளர்ந்து நித்திய மோட்ச மகிமைக்கு பாத்திரராவர்.

(7) எனது செபமாலையில் உண்மையான பக்தியுடையவர்கள் திருச்சபையின் அனுமானங்களை அல்லது அருளுதவிகளைப் பெறாமல் சாக மாட்டார்கள்.

(8) எனது செபமாலையைச் சொல்லுகிறவர்கள் தமது வாழ்விலும் மரணநேரத்திலும் இறைவனின் ஒளியையும். தேவனின் அருட்கொடைகளின் பூரணத்துவத்தையும், கண்டு புனிதர்களின் பெறுபேறுகளில் பங்குபெறுவர்.

(9) செபமாலைப் பக்திக்கு பிரமாணிக்கமாக இருப்பவர்களின் ஆத்துமாக்களை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசக அன்பர்களே!

"நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் இரண்டு. ஒன்று மனச்சாட்சி- ஒன்று தெய்வத்தின் சாட்சியம்மா." என்கிறான் இக் காலக் கவிஞன்! நாம் ஊரை ஏய்க்கலாம். உலகை ஏய்க்கலாம். ஆனால் மனச்சாட்சியை ஏய்க்க முடியாது.

"பொய்சொல்லி நாம் தப்பித்துக்கொள்ளலாம் என்று வீம்பு பேசுகிறோம். ஆனால் இவையெல்லாம் தற்காலிகமானதே. தற்செயலாக அவன் தப்பித்துக்கொண்டாலும், சதா அவன் மனச்சாட்சி அவனை அரித்துக்கொண்டே இருக்கும். ஊர் உலகம் தண்டிக்காவிடினும் இறைவனின் குரலாம் மனச்சாட்சி அவனைத் தொடர்ந்து துன்புறுத்திக் கொண்டேயிருக்கும்."

திருநூல் தெட்டத்தெளிவாக இரு வசனங்களில் சுட்டிக்காட்டுகிறது இப்படி!

"பொய்ச்சாட்சி சொல்லுகிறவன் தண்டனை அடையாமல் இரான். தவறுகளைப் பேசுகின்றவனும், தப்பித்துக்கொள்ளான்." என்று 19/5 இல் இடித்துக் கூறுகிறார்."

இதையே நம் முன்னோரும் முதுமொழியில் கூறுகின்றார்."

"பொய்சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது." என்று! அது மட்டுமா? அவனுக்கு வரப்போகின்ற தண்டனையையும், முன்மொழிகின்றார்! எப்படி?

"உப்பைத்தின்றவன் தண்ணீர் குடிப்பான்- தப்பு செய்தவன் தண்டனை கொள்வான்" என்று! மேற்கூறிய வேதாகம அறிவுரையோடு கவிஞனின்- முன்னோரின் அறிவுரையையும், ஊன்றிப் படித்த நாம் சற்று ஆழமாக நமது வாய் வார்த்தைகளை அளந்து- உண்மையுடன் பேசுவோமா?

### வாரம் ஒரு சிந்தனை

"சில சமயங்களில் 'பொய்க்கால் குதிரைகள்' உண்மையான குதிரைகளைவிட அழகாக ஆடுகின்றன."

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.

## பங்குச் செய்திகள்

திருச்சபை சம்பந்தமான, திருச்சபையோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் நீங்கள் வாழும் பகுதிகளில் நடைபெறும்போது அவற்றை எமக்கு மிகவும் சுருக்கமாக, சாரத்தை மட்டும் எழுதி அனுப்புங்கள். பங்குத்தந்தையின் அங்கீகாரம் பெற்ற செய்திகளே பிரசுரிக்கத் தகுதிபெறும்.

ஏனையோர் கண்டு பாவிக்கக் கூடிய நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ஆ-ர்)




| ஒளி: 3<br>சுடர்: 37 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

### அங்கத்துவம்

காவலன் கண்மணிகள் தொகை சுடருக்குச் சுடர் அதிகரித்த வண்ணம் இருக்கிறது. ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரைக் கற்பவர்களுக்கு மட்டும்தான் அங்கத்துவம் கொடுக்கப்படும். அதற்குக் குறைவாகக் கற்பவர் காலம் வரும் வரை காத்திருங்கள்.

சிலர் அங்கத்துவ எண் கொடுத்த பின்னும் தவறுதலாக மீண்டும் அங்கத்துவம் கோருகிறார்கள். தயவு செய்து காவலனைத் தவறாது படித்து வாருங்கள். உங்கள் அங்கத்துவ எண்ணை தகுந்த முறையில் குறித்து வையுங்கள்.

226. ந. யுஸ்ரின் பீரிஸ் ஆண்டு 11 அ. ம தி. குருமடம், கொழும்புத்துறை.
227. செ. இமாக்குலெற் ஆண்டு 11 புனித அந்தோனியார், றோ. க. பெ. பா. பாஷையூர்.
228. ஜ. யூட் நிறோன் ஆண்டு 8 புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.
229. சி. யேசுதாசன் ஆண்டு 9 புனித லூசியா றோ. க. த. க. வி. பள்ளிமுனை.
230. ஜெ. அன்ரன் மறினஸ் ஆண்டு 9 ,,
231. பி வேபியன் பிகிறேடோ ,, 9 ,,
232. ஆ. எஸ்தர் அமலதாஸ் றோச் ஆண்டு 9 புனித லூசியா றோ. க. த. க வி. பள்ளிமுனை
233. யோ. எட்வேட் பிறட்மன் பிகிறுடோ ஆண்டு 9 புனித லூசியா றோ. க. த. க. வி. பள்ளிமுனை

### கௌரவ அங்கத்துவம்:

A 22. ம. மே. எ. புஷ்பநாயகி ஆண்டு 12 பண்டத்தரிப்பு, மகளிர் கல்லூரி
A 23. S. யூட் றொபேட்சன் 'அருள் ஆச்சிரமம்' 5, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
A 24. R. S. M. P. லதா ஆண்டு 12 தமிழ் மகா வித்தியாலயம், நிலாவெளி.
A 25. T. விஜோறிராஜா 'அவன் அகம்' மேரி ஜோசப் றோட், நாவாந்துறை வடக்கு.

★ ★ ★

### வாழ்க! வளர்க!

வளர்ந்து வரும் இளம் உள்ளங்களை
ஊக்குவிக்க, உள்ளமதில் ஊற்றெடுக்கும்
எண்ண அலைகளை வாரம் தோறும் தவறாது
வழங்கி வரும் காவலன் கண்மணியே!
நீ என்றும் வாழ்க! வளர்க!

பி. றஞ்சிற் றுஷ்வோல்ட்
அ, எ. 81.

### செபமாலை

பாவி எம் மனிதருக்கு
பாவம் பல போக்கி
பரலோகம் செல்ல
பாதைபடைப்பது செபமாலை.

அழிவினை விடுத்து
அன்பினைப் பெருக்கி
அற வழியிலே நடக்க
ஆதரவு தருவது செபமாலை.

வாழ்விழந்த மனிதருக்கு
வாழ்வளித்து
வளமான வாழ்விற்கு
வழிகாட்டுவது செபமாலை.

உருளும் உலகில்
உயர்வான சிந்தனையில்
உண்மையாம் இறைவனை
உணர்த்திடச் செய்வது
செபமாலை.

குமுதன்
யா. யூலன் குருஸ் அ. எ. A 7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா போட்டி—28

''பாதுகாவலன்'' பத்திரிகையில் இதழ் 31 தொடக்கம் இதழ் 35 வரை விஞவுக்குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து விஞ இலக்கத்தையும், சரியான விடையையும் தெளிவாக எழுதி 10-11-89ற்கு முன் ''பாதுகாவலன்'' அ.பெ.இ. 2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். விடையும் பரிசு பெறுபவர் பெரும், அடுத்த போட்டியும் 24-11-89ல் வெளி வரும். பரிசு ரூபா 25/-

வினக்கள்

1) மகிமைக்கு முன்னே செல்லும் புண்ணியம் யாது?
2) புனித தோமஸ் அக்குயினஸ் கிறிஸ்தவர்கள் மட்டில் கொண்டிருந்த நல்லெண்ணம் என்ன?
3) இறைவழிபாட்டிலிருந்து மனிதன் விலகிச் செல்லும் போது ஏற்படும் தீமைகள் 2 கூறுக?
4) உண்மை அரசுக்குரிய குணதிசயங்கள் எவை?
5) யேசு மெச்சத்தக்க வகையில் நீதியற்ற கண்காணிப்பாளன் எங்ஙனம் விவேகமாக நடந்து கொண்டான்?

போட்டி 27 இன் சரியான விடைகள்

1) குருத்துவ வேலை.
2) நடினக, ஷாபஞ ஆஸ்மி.
3) சென்னையில் இருந்து வெளியாகிறது.
ஆசிரியர்; அருட் திரு. செபஸ்தியன் கிர்பாகரன்.
4) புனித எவுதஸ் அருளப்பர்.
5) அமதிபுரம்.
6) இதயம்.
7) மனச்சாட்சி.
8) அதி. வண. மார்சலோ சகோ அடிகள்

பரிசு பெறும் நற்பேருளர்
இ. ஆன் அன்ரனிற்று லெம்பேட்
8ம் வட்டாரம், வங்காலை.

பாராட்டுப் பெறுவோர்:

1) ரமணி ராஜரட்ணம (2) மரியோ யேம்ஸ்சோசை,
3) L. R. கொன்ஸ்ரன்ரைன் (4) மேரி றுவீஞ சபாநாயகம்
5) இ. நிக்கிலாஸ் சோசை (6) ஆ. அன்ரன் மார்க்
(7) சு. யூட் ரிரேன் (8) இ. சுதா லெம்பேட் (9) யோ. யோண் சன் ராஜ்குமார் (10) ப. மக்ஸ்மலா (11) சுகந்தி அருளானந்தம் (12) டிஞேசா ஸ்ரீபன் (13) அன்ரன் கிறிஸ்ரபெல் மேரி பபிதா (14) பா. ஆன் அநந்தவரா...
15) சூ. நோ. உதயகுமார்

சிலர் விடைகளை சரியாக எழுதியிருந்தும் தமது பெயர்களைக் குறிப்பிடாத காரணத்தால் பெயர்களைக் பிரசுரிக்க முடியவில்லை. தயவு செய்து போட்டியில் பங்கு பற்றுவோர் உங்கள் பெயர் விலாசத்தைக் குறிப்பிட மறக்க வேண்டாம்.

## எழுதிச் செபியுங்கள் போட்டி 27ல்

பாராட்டுப் பெறுவோர்

(1) M. M. நிக்சன், (2) பி. யோசவ் (3) பேணுட் றேசஞ (4) ம. ஆன் ஜெனிதா, (5) ச. சுதர்ஷினி (6) தா சசிகலா (7) S. தரணி, (8) வி. அன்பழகி (9) அ. றீற்று (10) மேரி பிறேமா (11) அ. ஜெறுளின் ஜொய்சி (12) S. ரமணி ராஜரட்ணம் (13) திருமதி. தவமணி பேரின்பநாதன்

## விற்பனைக்குள்ள புத்தகங்கள்

| | | ரூ. – ச |
|---|---|---|
| பிரேக் நகர் குழந்தை யேசுவின் 12 திங்கட்கிழமையின் பக்தி முயற்சி | ... | 1 - 00 |
| புனித ஆரோக்கிய மாதா நவநாள் செபம் | ... | 2 - 00 |
| ஆண்டவருடைய கல்லறைச் செபம் | ... | 1 - 50 |
| செபமாலைத் தியானம் | ... | 2 - 00 |
| சதா சகாய மாதாவை நோக்கி நவதின வேண்டுதலும் பிரார்த்தனையும் | ... | 2 - 00 |
| புனித அந்தோனியார் பக்திமாலை | ... | 2 - 00 |
| திருமணித்தியாலம் | ... | 2 - 50 |
| சிறுவர் செபத்துணை | ... | 10 - 00 |
| சுருக்கமான சிலுவைப்பாதை | ... | - 75 |
| வியாகுல பிரசங்கம் | ... | 7 - 50 |
| சிலுவையின் பாதையில் சிதறிய சிந்தனைகள் | ... | 1 - 00 |
| திருக்குறளும் விவிலியமும் பகுதி 1 | ... | 5 - 00 |
| ,, ,, 2 | ... | 5 - 00 |
| யோசவ்வாஸ் முனிவரின் சரிதை | ... | 5 - 00 |

கிடைக்கும் இடம்:

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி,
த. பெ. எண் – 2
யாழ்ப்பாணம்.

மனிதர் அனைவருமே உத்தமராய் இருந்தால் கடவுளுக்காக நாம் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ள என்னதானிருக்கிறது?

விதைக்கப்படுவது மனித உயிர் கொண்ட உடல், உயிர்த்தெழுவது தேவ ஆவிக்குரிய உயிர் கொண்ட உடல். (1 கொரி. 15:44).

## ஆன்ம அழைப்பில் முதல் வருட நிறைவு



திருமதி. அல்வினம்மா பறுணுந்து

தாயின் மடியில்: 10-11-1925 ஆண்டவன் அடியில்: 23-10-1988

''கெழுமிய அன்பு லாசர் இறந்தான்.
அழுதனர் உறவினர்.
யேசுவும் அழுதார்.
அழுதோர் வேண்டுதல் கேட்டு இரங்கி,
விழுமிய ஆற்றல் விளங்கச் செய்தார்.''

எதிர் வரும் 23-10-1989 காலை 6.15 மணிக்கு நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்கு பற்றி இவரின் ஆன்ம சாந்திக்காக மன்றுடும்படி கேட்டுக்கொள்கின்றேம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள், மற்றும் உற்றுர், உறவினர்.
மத்தியபூமி,
நெடுந்தீவு, 9. A/226.

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



ரெட்ணம குணநாயகம்
(R.G. ஸ்ரோஸ் உரிமையாளர்)

மலர்வு: 26-2-1942 உதிர்வு: 21-10-87

உன்முகத்து ஒளியினிலே
நாங்கள் முகமலர்ந்து
வீற்றிருந்த வேளையில்
கலகலப்பு வாழ்க்கையெல்லாம்
கனவாகிப் போனதைய்யா
சோகத்தில் முகம்கூப்பி
விழியெல்லாம் நீர் தேங்க
குணத்தின் ராஜாவாக
திகழ்ந்து
உயர்ந்த தலைமகனைய்
எம்மையெல்லாம் பிரிய
மனமின்றி பிரிந்தீரே!

இவரின் ஆன்ம சாந்திக்காக சுண்டிக்குளி புனித யுவானியர் ஆலயத்தில் 21-10-89 சனிக்கிழமை காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
தாய், மருமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

54, றக்கா ரேட்,
யாழ்ப்பாணம். A/233

## 31-ம் நாள் நினைவஞ்சலி



''ஆண்டவருள் இறப்பவர் பேறு பெற்றேர்; ஏனெனில், அவர்கள் செய்த நன்மையே அவர்களோடு கூடவரும்''
[திருவெளிப்பாடு 14:13]

திருமதி சூசன் ஜோசப் இராசரெட்ணம்

மலர்வு: 31-01-1910 உதிர்வு: 26-09-1989

பண்பிலும், பாசத்திலும் எங்களைப் பேணிவளர்த்த அன்புத் தாயே, தியாகத்தின் சுடரே, உங்களை எங்கள் வாழ்நாள் முழுதும் மறவோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் 26-10-1989 வியாழன் காலை 5-30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பின் சகோதரி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,

ஆல/21, சின்னக்கடை வீதி
குருநகர்,
யாழ்ப்பாணம். A/235

எங்களை விட்டு என்றும் உங்கள் நினைவு அகலாது

## 2-ம் ஆண்டு நினைவு தினம்



ஜெயக்குமாரி
மலர்வு:- 1974-10-01
உதிர்வு:- 1987-10-21



ஜோசப் மேவின்
மலர்வு:- 1967-07-23
உதிர்வு:- 1987-10-21



ஜெனுந்திரேஸ்
மலர்வு:- 1973-03-05
உதிர்வு:- 1987-10-21

அன்பான இறைவா!

மண் மழையை மறந்தாலும் மழைதான் மண்ணுக்குயிர், அவ்வாறு நாம் உம் அன்பை மறந்தாலும் அண்டிவந்து அன்பு செய்பவர் நீர்தான்.

இறைவனின் அருளைப்பாடியும், விளங்க வாசித்தும் அவருக்கென்று தொண்டு செய்து இறைபணியை நிறைவேற்றிய மேவின், எழில் வதனம் கொண்ட ஜெனு, துள்ளித்திரியும் வயதில் எம்மை விட்டுப் பிரிந்த ஜெயா ஆகியோருடைய பாவத்தை மன்னித்து அவர்களுக்கு புனிதர்களின் தோழமையைக் கட்டளை இடவேண்டும் என்று இறைவா உம்மை மன்றுடுகின்றேம். ஆமென்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக யாழ். மரியன்னை பேராலயத்தில் 21-10-89 அன்று காலை 6.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்கு கொண்டு இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டும்படி கேட்டுக் கொள்கிறேம்.

இவர்களின் பிரிவால் வ டும்
தந்தை, தாய், சகோதரர்கள்,
உற்றுர், உறவினர்.

A/228

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# சாபாவின் நற்கருணை மகாநாடு

கிழக்கு மலேசியப் பிரதேசமாகிய சாபாவிலுள்ள கத்தோலிக்கர் அடுத்த ஆண்டு நற்கருணை திருநாள்வரை நற்கருணை மகாநாட்டுக்கான பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர், செப்டம்பர் முதலாம் திகதி நற்கருணை மகாநாட்டை ஆரம்பித்து வைக்கையில் கோட்டாகினு பலு ஆயர் ஜோண் லீ யாவ் நற்கருணைபற்றி மேலெழுந்தவாரியான விளக்கமும் அனுபவமும் மறைமாவட்டத்தில் பரவலாகக் காணப்படுவதாகவும், ஆண்டவரில் வளர்ச்சியடைய வேண்டுமாணல் இதனைத் திருத்த மக்கள் உறுதி பூண வேண்டுமென்றும் கூறினர்.

திருப்பலியை நன்கு விளங்கி அதன் சிறப்பை உணர்வதற்கு மகாநாட்டில் 30 திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை நன்கு ஆராயப்பட்ட பின்னர் மறையறிவு, திருவழிபாடு, பக்தி முயற்சிகள், சமூகத்திட்டங்கள் ஆகியவற்றில் செயற்படுத்தப்படும்.

கிராமம், பங்கு, பிரதேசம், மறைமாவட்டம் ஆகிய மட்டங்களில் இவை செயற்படுத்தப்படுமென்றும், இறைவழி காட்டுதலுக்காகச் செபிக்க வேண்டுமென்றும் ஆயர் குறிப்பிட்டார்.

170,000 கத்தோலிக்கர் அடங்கிய இம்மறை மாவட்டத்தின் 27 பங்குகளில் 23 குருக்களே பணியாற்றி வருகின்றனர்.

# தொலைக்காட்சித்தொடரில் வேதாகமம்

தூரதர்ஷன் தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்படவிருக்கும் ''வேதாகம வரலாறுகள்'' படப்பிடிப்பு செப்டெம்பர் 17 ஆம் திகதி கொச்சினில் ஆரம்பமாகியது. கருதினல் அந்தோனி படியாரா இம் முயற்சியை ஆசீர்வதித்தார். இவ்வைபவத்துக்குக் கேரள எதிர்க்கட்சித்தலைவர் திரு. கருணாகரன் தலைமை வகித்தார்.

மத்திய அரசு அமைச்சர் திரு. கிருஷ்ணகுமார் பேசுகையில் ''தூரதர்ஷன் மக்கள் மத்தியில் பிற சமயங்கள் மட்டில் சமரச மனப்பான்மையை ஏற்படுத்த முனைகிறது. எல்லா மதங்களுக்கும் சம முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. வேதாகமத்தைப் போலவே பௌத்த, சைவ, இஸ்லாம் மதங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்படும்.

முதலாம் நூற்றுண்டிலேயே கிறிஸ்தவத்தை வரவேற்ற பிரதேசமாகிய கேரளத்திலேயே வேதாகமம் படம் பிடிக்கப்படுவது மிகப்பொருத்தமானதே'' என்றூர்.

நோவா, பாபேல் கோபுரம் பற்றிய வரலாறுகள் இரு வாரங்களில் தயாராகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மறைமாவட்டக் குருக்களின் ஆன்மீகம் பற்றிய உரையாடல்

''மறைமாவட்டக் குருக்களின் ஆன்மீகம் நற்கருணையைச் சுற்றி அமைந்துள்ளது. தனது மந்தையை நன்கு வழிநடத்த குருவானவர் நற்கருணையிலிருந்து சக்தியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்'' என பூனே குருத்துவக் கல்லூரியில் ஆகஸ்ட் 2 ஆம் திகதி நடைபெற்ற ஒரு குழு ஆய்வில் பிதா அலெக்ஸ் குவாட்ரேஸ் கூறினர்

குருத்துவ மாணவரின் உருவாக்கத்தில் ஒரு பகுதியாகக் கருதப்படும் இக்குழு ஆய்வில் 3 பங்குகளிலிருந்து வந்த பங்குக் குருக்கள் மேற்கண்ட விடயம் பற்றித் தமது கருத்துக்களை எடுத்துக்கூறினர்.

பூனே மறைமாவட்ட மாணவர் இயக்கத்தின் இயக்குநரான பிதா அலெக்ஸ் ''இன்றைய குருத்துவப் பயிற்சி மாணவர்களை பங்குப்பணிக்கு அவ்வளவாக ஆயத்தம் செய்வதாயில்லை. பங்கிலே ஓர் ஆயனக, மந்தைகளைப் பராமரித்து, குணப்படுத்தி, கைவிடப்பட்டோர் கவலையுற்றோரை தேடிச்செல்வதே எமது பணியாகும். ஆகவே கருணையும் புரிந்துணர்வும் உள்ளவராய் எந்த வேளையிலும் மக்கள் அணுகக்கூடியவராய் இருப்பது அவசியம்'' என அவர் மேலும் கூறினர்.

# அன்னையரால் புனித மொனிக்கம்மாள் தினம் கொண்டாடப்பட்டது

பாகிஸ்தானிலுள்ள பைசலாபாத் மறைமாவட்டத்தின் பேராலயத்தில் அன்னையர் ஒன்றுகூடி புனித மொனிக்கம்மாள் தினத்தைக் கொண்டாடினர்.

வட ஆபிரிக்காவில் ஏறத்தாழ 322 ஆம் ஆண்டில் பிறந்த புனித மொனிக்கம்மாள் புனித அகுஸ்தினுரின் தாயாவார். அகுஸ்தினுரை மனந்திருப்பியது அவளது விசுவாசமும், செபமுமே என்பது புனித அகுஸ்தினுரின் எழுத்துகளில் காணப்படுகின்றது.

பைசலாபாத்தில் கூடிய அன்னையர் ஆண்டுதோறும், இத்திருநாளைக் கொண்டாடுவதெனத் தீர்மானித்துள்ளனர்.

ஆயர் திருப்பலி ஒப்புக்கொடுக்கையில் திருவுரை ஆற்றுது, அங்கு இருந்த பெண்களையே தத்தம் சிந்தனைகளைப் பகிருமாறு செய்தார்.

# புதியதோர் யுகத்தின் பேறுகால வேதனை

—அருட்திரு. அதிரியான் யோசப் அ.ம.தி.—

II பரிகாரம் தேடல் (தொடர்ச்சி)

தனது சொந்த தனித்துவத்தையும் (Identity) தனது உண்மைச் சுதியையும் அறியத் தேடியலையும் இன்றைய மனிதனுக்கு நிலையான சார்பற்ற (Absolute) விழுயங்களில் ஈடுபட ஊக்குவித்தல் அவசியம். கிறிஸ்துவே நமக்கு ஒளியும், வழியும், உண்மையும், உயிருமாயிருக்கிறர், நாம் உலகத்தில் இருந்தாலும் அதைச் சார்ந்தவரல்ல, இறையரசை முதல் தேடினல் மற்றவையெல்லாம் கைகூடும், நிலையற்ற இவ்வையகம் முழுவதையும் நமதாக்கிக் கொண்டாலும் நம் அழியாத ஆன்மாவை இழந்தால் என்ன பயன்? இவைபோன்ற மறை உண்மைகளை எடுத்து அயராது உணர்த்த வேண்டும்.

மனிதனுடைய மாண்பினைப் பற்றியும் ஆணித்தரமாக விளக்கவேண்டும். மனிதன் இறைவனின் சாயல், அவரது பிள்ளை, இறையரசைச் சுதந்தரித்துக் கொள்ளும் உரிமை பெற்றவன். கிறிஸ்துவின் மறையுடலில் அங்கங்கொண்டவன். எனவே ஒரு பாட்டாளி தன்முதலாளிக்கு ஈட்டித் தரும் வருமானத்தையும்விட, அல்லது அவன் ஒரு பொதுவுடைமை அரசிற்குத் தன் பங்களிப்பாய் செய்யும் தொழிலையும்விட முக்கியத்துவம்வாய்ந்தது அம்மனிதனின் ஆளுமையே.

6. அவ்வப்போது தேவையானதை அவசரஅவசரமாக, பம்பரம்போற் சுழன்று, பலவற்றை ஒரே மூச்சில் செய்து முடிக்க அவதிப்படும் இன்றைய மனிதனின் வாழ்வுமறதி கிறுதியாய்த்தான் இருக்கும். மேலும் சத்தம் சச்சடிம், படபடப்பும் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் தியானத்திற்கும் சொந்தச் (Personal) செபத்திற்கும் மௌனமும், அமைதியும் இன்றியமையாதவை. அமைதியிலேதான் ஆண்டவரும் நம்மோடு பேசுவார், நிம்மதியும் சாந்தியும் அடைவோம். மேலும் நாம அறிந்த உண்மைகளை உள்ளார ஏற்றுக் கொள்வதற்குப் (Interiorizati-on), வாழ்க்கை செல்லும் திசை நிலையை (Bearing) நெறிப்படுத்துவதற்கும் நாம் சற்று ஆறியமர்ந்து சிந்திப்பது அத்தியாவசியமாகும்.

7. போட்டி மனப்பான்மை அசுரவேகத்துடன் அதிகரித்துக் கொண்டுவரும் இன்றைய வர்த்தக உலகில், உற்பத்திப் பொருட்களின் தொகையை விட அதன் தரத்தையே மூதல் தேடவேண்டுமென நாம் வலியுறுத்தவேண்டும். ''செய்வன திருந்தச்செய் என்னும் கூற்றுக் கிணங்க கல்வி நிறுவனங்களிலும் இத்தகைய ''தொகை உற்பத்தியை'' (Mass production) தவிர்க்க வேண்டும். இறைசித்தத்தைவிடச் சுயசித்தியைத் தேடும் தனிப்போட்டி மனப்பான்மையை விடுத்து, கூட்டொத்துழைப்பு (Team-work) பொறுப்புணர்வுள்ள கூட்டொருமை (Responsible Solidarity) போன்றவற்றை எல்லாத்துறைகளிலும் சிறுவயதிலிருந்தே பயிற்றுவிக்க வேண்டும்.

மக்களை மந்தைக் கூட்டமாகக் கணிக்கும் இன்றைய உலகில் தனிமனிதன் சனக்கும்பலில் மறைந்து, தனது தனித்துவத்தையும் (Identity) ஆளுமையையும் (Personality) சொந்தப் பொறுப்புணர்வையும் (Sense of responsibilty) மறந்து விடுகிறுன். எனவே சிறு குழுக்களிலே அவன் ஈடுபடச் செய்து, அக்குழுவில் தனது ஆக்கபூர்வமான பங்கையும் பொறுப்பையும் உணரச் செய்யவேண்டும். இப்பயிற்சி வீட்டிலே ஆரம்பமாகி பாடசாலையிலே விருத்தியடைய வேண்டும்.

மனிதனை ஆறிவுயிர் என்றும் விலங்கை (மூடனையும்) ஐயறிவுயிர் என்றும் நம் முன்னேர் வகுத்தனர். ஐம்புலன்கள் ஊடாக அறிவூட்டும் ஒலி ஒளிக்கருவிகளை அதிகம் கையாண்டால், ஆறுவது புலனை சிந்தனைசக்தி சோம்பிச் சூம்பி கருத்துப் பொருளை (Abstract-idea) விட பருப்பொருளையே (Concreteidea) கூடக் கிரகிக்கும் ஐம்புலன் கடந்த மறை உண்மைகளை அறிவதும், கடினமாயிருக்கும். எனவே பிள்ளைபால் மறக்கப்பண்ணுவது போல கூடிய விரைவில் இத்துணைக் கருவிகளைக் குறைத்து, ஐம்பொறி அவித்து தியானத்தில் ஈடுபட பிள்ளைகளைப் பயிற்ற வேண்டும். (தொடரும்)

## அன்னை மரியாள்....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய விரைவில் தவருது உத்தரிக்கும், ஸ்தலத்திலிருந்து மீட்பேன்.

(10) எனது செபமாலையின் உண்மையான பிள்ளைகள் மோட்சத்தில் பேரின்ப மகிமையை அனுபவிப்பார்கள்.

(11) எனது செபமாலையின் மூலமாக நீங்கள் கேட்பவைகள் எவைகளோ அவைகளைப் பெற்றுக் கொள்வீர்கள்.

(12) எமது செபமாலைப் பக்தியைப் பரப்பும் அனைவரும், என் மூலமாகத் தங்கள் தேவைகளில் எல்லாம் உதவியைப் பெற்றுக்கொள்வர்.

(13) செபமாலை சபையைச் சேர்ந்தவர்கள் எல்லோரும், வாழ்விலும், சாவிலும் மோட்சவாசிகளான புனிதர்களைத் தம் சகோதரர்களாக பெற்றுக்கொள்வர் என்னும், உறுதிமொழியை எனது திருமகனிடமிருந்துபெற்றுள்ளேன்.

(14) விசுவாசத்துடன் எனது செபமாலையைச் சொல்லும் அனைவரும், எனது அன்பிற்குரிய பிள்ளைகளும், யேசுக் கிறிஸ்துவின் சகோதர சகோதரியுமாவார்.

(15) செபமாலையின் பக்தி, வரப்போகும் பரகதியின் பேரின்ப வாழ்வுக்கு, ஓர் முன் அறிகுறியாகும்.

தொகுப்பு:- அருட்திரு. லூயிஸ் மொன்போட்.

# அரியாலை புனித யூதாததேயு ஆலயம்



## திருநாள் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 25-10-89 | புதன் மாலை 4-30க்கு செபமாலையும், திருப்பலியும். |
| 26-10-89 | வியாழன் மாலை 4-30க்கு செபமாலையும், திருப்பலியும். |
| 27-10-89 | வெள்ளி மாலை 4-30க்கு செபமாலையும், திருப்பலியும் நற்கருணை ஆராதனையும். |
| 28-10-89 | சனி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சொரூப ஆசீர்வாதமும். |

-பங்குத்தந்தை

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல: QD/ 1001/ 58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னேடிருக்கிறேம் என்கிறர் ஆண்டவர்